Class-12

# TAMIL

GENERAL EDUCATION DEPARTMENT
SAMAGRA SHIKSHA, KERALA

# தமிழ் – XII

## அலகு -1 வயலும் வாழ்வும்

## ஏறுபூட்டி

## ‘ உழவு’

உழவர்கள் இவ்வுலகத்தின் ஆணிவேராக இருக்கிறார்கள். வேளாண்மையில் சிறந்து விளங்கும் நாடே ஏற்றம்(வளர்ச்சி) அடைகின்றது. அவ்வகையில் இலக்கியத்தில் வேளாண்மைக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்திற்கு சான்றாக அமைவது திருக்குறளில் இடம்பெற்றுள்ள 'உழவு' என்னும் அதிகாரமாகும். 'உழவு' என்னும் அதிகாரம் பொருட்பாலில் இடம்பெற்றுள்ளது.

**நூற்குறிப்பு : (திருக்குறள் நூற்குறிப்பு எழுதுக?)**

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட நூல் திருக்குறளாகும். 1330 திருக்குறள்களும் அதிகாரத்திற்கு பத்துப்பாடல்களாக மொத்தம் 133அதிகாரங்களை கொண்டுள்ள நூலாகும். உலகப்பொதுமறை, பொய்யாமொழி,வாயுறைவாழ்த்து,முப்பால்,உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்களாலும் அழைக்கப்படுகின்ற சிறப்பிற்குரிய நூலாகும். இந்நூல் அறத்துப்பால்,பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் பிரிவுகளை உடைய நூலாகும்.அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் பொருட்பால் 70 அதிகாரங்களையும் இன்பத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது.

**திருக்குறள்;- உழவின் பெருமை - வள்ளுவர் கூறும் கருத்துக்கள்.**

1. **சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
   **உழந்தும் உழவே தலை.**

உழவுத்தொழிலில் இருக்கும் துன்பங்களின்(நெருக்கடிகள்) காரணமாக இத்தொழில் செய்வோர் வேறு தொழில்களுக்குச் சென்றாலும் இவ்வுலகம் ஏர்த்தொழில் செய்வோர் பின்தான் இயங்குகின்றன. அதனால் எத்தனை வருத்தங்கள் அல்லது துன்பங்கள் இருந்தாலும் உழவுத்தொழிலே முதன்மையானதாக கருதப்படுகின்றது.

2. **உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து.**

உழவுத்தொழில் அல்லாத பிறதொழில்செய்வோர் அனைவருக்கும் உழவர்களே காக்கும் செயல் செய்வதால் அவர்களே இவ்வுலகிற்கு அச்சாணி ஆவார்கள்.

3. **உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்**
**தொழுதுண்டு பின் செல்பவர்.**

உலகில் உள்ள பிறர்க்காகவும் உழுது தாமும் உண்டு வாழ்பவர்கள் உழவர்கள். மற்ற அனைவரும் பிறரை தொழுது அவர் தருவதை உண்டு பின்னே செல்பவர் ஆவார் என்கிறார் வள்ளுவர்.

4. **பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்**
**அலகுடை நீழ லவர்.**

உழவுத்தொழில் செய்வதால் தானியவளம் பொருந்திய உழவர்கள்,பலம்பொருந்திய பல அரசர்களின் ஆட்சி சிறப்புகளையும் தனது சிறப்பிற்கு உட்பட்டு இருப்பதைக் காணலாம்.

5. **இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது**
**கைசெய்தூண் மாலை யவர்.**

தம் கையால் உழுது உண்ணும் இயல்பை உடைய உழவர்கள் பிறரிடம் யாசித்து நிற்கமாட்டார்கள். அதேபோன்று தம்மிடம் பொருள் யாசித்து வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் கொடுத்து இன்புறுவர்.

6. **உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்**

**விட்டேம்என் பார்க்கும் நிலை**

உழவுத்தொழில் செய்யும் உழவர்கள், தம் வேலையை

செய்யாதுவிட்டால் எல்லா பற்றும்(ஆசையும்) விட்ட துறவிகளின் வாழ்வே அறநிலையில் இருந்து தவறிவிடும் .

7. **தொழப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்**

**வேண்டாது சாலப் படும்.**

வேளாண்மை செய்யும் நிலத்தை பலமுறை உழுது புழுதியாக ஆகும்படி காயவைத்து பிறகு பயிர் செய்வானாயின் அந்நிலத்திற்கு ஒருகைப்பிடி எருகூட இடாமலேயே அந்தப்பயிர் நன்கு வளர்ந்து நல்ல விளைச்சலைக் கொடுக்கும்.

8. **ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்**

**நீரினும் நன்றதன் காப்பு.**

வேளாண்மை செய்யும் நிலத்தை நன்கு உழுவதைவிட உரம் இடுதல் நல்லதாகும். அவ்வாறு உரம் இட்ட நிலத்தில் நீர்

பாய்ச்சுவதைக்காட்டிலும் களை எடுத்த பிறகு பயிரைக் காவல்

செய்வது நல்லதாகும் என்கிறார் வள்ளுவர்.

9. **செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**

**இல்லாளின் ஊடி விடும்.**

*நிலத்திற்கு உரிய உழவன் தினமும் நிலத்திற்குச் சென்று செய்யவேண்டிய செயல்களைச்(உழவு வேலைகளைச்) செய்யாது சோம்பலாய் இருந்தால், தன் கடமையை செய்யாத கணவனை எவ்வாறு அவன் மனைவி வெறுத்துக் கோபம் கொள்வாளோ அதேபோன்று நிலமும் வெறுத்துப் பலன் தராது சென்றுவிடும்.*

*10.* ***இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்***
***நிலமென்னும் நல்லாள் நகும்.***

*என்னிடம் ஒரு பொருளும் இல்லை என்று சோம்பல் உடையவரைக் கண்டால் நிலம் என்னும் நல்ல பெண் தன்னுள் எள்ளி நகைப்பாள்(ஏளனம் செய்வாள்).*

**பசித்தவர்கள் பக்கம்**

*நேசம் விதைத்த காட்டில்*
*நெருப்பு முளைத்தாலும்*
*பிடுங்கி எறிந்துவிட்டு*
*உழுது விதை விதைப்பேன்*
*தத்துவங்கள் வீழட்டும்*
*தேசங்கள் சிதறட்டும்*
*உலகம் எதையும் பிதற்றட்டும்*
*பசித்தவர்கள் பக்கமே என்றும்*
*நான் இருப்பேன்*

**கவிதை விமர்சனம்**

*விமர்சனம் ,திறனாய்வு இரண்டிற்கும் சிறு வேறுபாடு மட்டுமே உள்ளது.*

ஒரு கருத்தை,செயலை,படைப்பை,நயத்தை அல்லது அமைப்பை மதிப்பீடு செய்து கருத்தை முன்வைப்பதாகும். விமர்சனத்தின் பயன் என்பது எதை விமர்சனம் செய்தோமோ அதைப்பற்றிய நன்மை -தீமை , படைப்பின் தரம் அல்லது மதிப்பீடுகளை முன்வைக்கின்றது. விமர்சனம், விமர்சனம் செய்யும் நபரைப் பொறுத்து மாறும் தன்மையுடையது.

**திறனாய்வு;-**

திறனாய்வு என்பது ஒரு உயிருள்ள, உயிரற்ற பொருளின் பண்புகளைப் பற்றி ஆராய்ந்து உண்மைத் தன்மையையும் அதில் கூறப்பட்ட நேர், எதிர் கருத்துக்களை எடுத்து கூறுவது ஆகும்.

**பசித்தவர்கள் பக்கம் - கவிஞர் சமயவேல் – விளக்கம்**

தேசம் என்னும் பாசம் அதிகம் உள்ள நமது நாட்டில் நெருப்பு என்னும் தீமை தோன்ற நேர்ந்தால் அதை வேரோடு அழித்துவிட்டு நன்மை என்னும் விதையை நான் எங்கும் விதைப்பேன். பழைய பஞ்சாங்கங்கள் இல்லாமல் போகட்டும். இந்த உலகம் எதை வேண்டுமானாலும் கூறட்டும். நான் எப்பொழுதும் பசி என்னும் கொடிய நோய் உடையவர்களுடனே துணையாக இருப்பேன் என்கிறார் கவிஞர்.

உழவுத்தொழில் செய்யும் விவசாயிகள் எப்பொழுதும் பசியைப் போக்கும் செயலை மட்டுமே செய்வார்கள். அவர்களுடைய சிந்தனை வேறு எங்கும் செல்லாது என்பதையே விளக்கிச் செல்கிறார்.

## மண்நேசம் - அ. முத்தானந்தம்

**கதாப்பாத்திரங்கள் ;-**

பாட்டையா,

மூனா பீனா - முதலாளி

மைனர் முதலாளி

மைனர் முதலாளி மனைவி .

**கதைக்கரு:**

மண்நேசம் என்னும் இச்சிறுகதையில் பாட்டையா என்னும் கதாப்பாத்திரத்தை, ஒட்டியே கதைப்பின்னல் உள்ளது. வேளாண்மையில் தொழில்நுட்பக்கருவிகளை பயன்படுத்தினாலும் வேலையாட்களின் தேவை அவசியம் என்பதை இச்சிறுகதையின் மூலம் ஆசிரியர் கூற விரும்புகிறார்.

பழைய ஆட்கள் என்று குறிப்பிடப்படும் வேளாண் அனுபவம் மிக்கவர்கள் கருவிகளுடன் வேலையாட்களின் தேவையை உணர்ந்து இரண்டையும் இணைத்து செயலாற்றினார்கள். ஆனால் இளைய தலைமுறையினர் அனுபவக்குறைவின் காரணமாக நம் முன்னோர் பின்பற்றி வந்த பல வேலைகள் அவர்கள் அறிவதில்லை என்பதே இதன் தெளிவு.

### போராளிகள்

வாரிக் களத்தடிக்கும் வந்தபின்பு கோட்டைபுகும்
போரில் சிறந்து பொலிவாகும் - சீருற்றசெங்கோல்
மேனித் திருமலைரா யன்வரையில்
வைக்கோலும் மால்யனை யாம்.

### காளமேகப்புலவர் கையாண்டுள்ள சிலேடை

***<u>சிலேடை</u> :*** *ஒரு சொல் அல்லது சொற்றொடர் பல பொருள் படும்படி அமைவது சிலேடை எனப்படும்.*

***<u>யானைகள் :</u>***

*போர்க்களத்தில் யானைகள் தம் துதிக்கையால் பகைவரின் படைவீரர்களை வாரி எடுத்துத் தரையில் மோதிக் கொல்லும். பின்பு பகை மன்னரின் கோட்டைகளைத் தகர்த்து உள்ளே செல்லும். இவையே போர்யானையின் செயலாகும்.*

***<u>உழவர்கள்:</u>***

*முதிர்ந்த நெற்கதிர்களை அறுவடைசெய்து வாரி அணைத்துக் கொண்டு வரப்பட்டு களத்தில் அடித்து நெல்மணிகளை உதிர்த்துவர். வைக்கோலை கோட்டைக்குள் போர்போராகச் சீராக வைப்பர்.*

*இவ்வாறு காளமேகப்புலவர் வைக்கோலும் யானையும் ஒரே குணம் கொண்டதாகப் பாடிய சிலேடைப் பாடலாகும். இவ்வாறாக யானையையும் வைக்கோல் போரையும் ஒரு செய்யுளில் இரு பொருள்பட பாடியுள்ளார்.*

***பாரம்பரிய நெல்வகைகளைப் பட்டியலிடுக?***

*இந்தியாவில் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான நெல்வகைகள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. வாடன் சம்பா,முருவு முளுங்கி, குள்ளக்கார், நவரை, குழிவெடிச்சான், அன்னமழகி, மாப்பிளைச் சம்பா, சீரகச் சம்பா,விஷ்ணுபோகம், கிச்சடிச்சம்பா, காட்டுயானம், நெய்கிச்சு போன்றவையாகும்.*

## ஏர் எழுபது

வள்ளுவர் உழவுத்தொழிலின் சிறப்பையும் இன்றியமையாமையும் உழவு அதிகாரத்தில் விளக்குகிறார். கம்பர் உலக மக்கள் அனைவருக்கும் முதுகெலும்பாக இருக்கும் உழவுத்தொழிலின் சிறப்பை இரு நூல்களில் எடுத்துக் கூறுகிறார். கம்பர் இயற்றிய நூல்களுள் ஏர்எழுபது, திருக்கை வழக்கம் ஆகியவை உழவுத்தொழிலையும் உழவையும் பாராட்டி எழுதியதாகும்.

### கார் நடக்கும் ..... பசி நடக்காது என்னும் பாடலின் விளக்கம் ;

தவறாமல் மழை பெய்ய நாட்டில் நல்லொழுக்கம் மிக்க வேளாளரது ஏர் நடக்குமாயின் நாட்டில் இயல், இசை, நாடகம் நடக்கும். பல்வேறு சிறப்புகளும் நடக்கும் . படைபலம் குன்றாது. உலகில் உயிர்கள் தோன்றும். ஆனால் பசி மட்டும் மக்களை வருத்தாது என்கிறார். வேளாண்மை சிறக்குமாயின் மக்கள் வறுமை இன்றி மகிழ்ச்சியுடன் இருப்பர் என்பதேயாகும்.

### கம்பர் எழுதிய நூற்கள்

சிலையெழுபது, சடகோபர் அந்தாதி, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம், கம்பராமாயணம் ,ஏரெழுபது, ஓப்பனக்கோவை.

# நம்ம நிலம்

### நம்ம நிலம் - மு.சுயம்புலிங்கம்

நம் முன்னோர்கள் வேளாண்மையை மிகச் சிறப்பாகவே செய்து வந்தார்கள். வேளாண்மை தொடங்கும் முன்பு கோடை காலத்தில் நிலத்தை பலமுறை உழுது பயன்படுத்தி பாதுகாத்து வந்திருந்தார்கள்.

ஐப்பசி மாதம் தவறாமல் மழை பெய்யும். குளம், குட்டை, ஓடைகள் நிறைந்து நிலமெல்லாம் நன்றாக விளைச்சல் தருகிறது. விளைந்த விளைச்சல் களம்

நிறைந்து காணப்படுகிறது. நெல் சேமிக்கும் குலுக்கைகளும் வீடு நிறைய மூட்டைகளும் நிரம்பின.

இவ்வாறு சிறப்பாக நடந்துகொண்டிருக்கும் நேரத்தில் புதிய வேளாண்முறை என்னும் நிலைக்கு நாம் தள்ளப்பட்டதை இக்கவிதை நமக்கு காட்டுகிறது.

இயற்கை உரங்களில் இருந்து இராசயன உரங்கள், வெளிநாட்டு விதைகள்(மரபணு மாற்றப்பட்ட விதைகள்)பூச்சிக்கொல்லி மருந்துகள் போன்றவை உரக்கடைகளில் நீங்கா இடம்பெற்றுவிட்டன.

இந்த செயற்கை வேளாண்மை முறை பொன் விளைந்த நம் மண்ணை தன் வளத்தை இழக்கச்செய்தது. விளைச்சல் சரியாக இல்லாததால் ஆடு-மாடுகளுக்கான உணவு இல்லாததால் அவைகளை விற்றுவிட்டார்களா.

வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டு வந்த கலப்பை, ஏர், போன்றவை அடுப்பெரிக்க பயன்படுத்தப்பட்டன.

இதற்கு ஒரே தீர்வுமீண்டும் நாம் இயற்கை வேளாண்மைக்குச் செல்லவேண்டும். இயற்கை உரங்கள், நாட்டு விதைகள் மற்றும் நம் முன்னோர்கள் பின்பற்றிய வேளாண் முறைகளை பின்பற்ற வேண்டும் என்கிறார்.

## நேர்காணல்

ஒருவரோடு தொடர்புகொண்டு அவர் மூலமாக விவரங்களை கேட்டுப்பெறுவதாகும். இது நேரிலோ, தொலைபேசி வழியாகவோ, கடிதம் அல்லது புதிய தகவல்தொடர்பு சாதனம் வழியாகவோ அமையலாம்.

கண்டிப்பாக நோக்கத்தோடு அமையவேண்டும். நோக்கமற்ற நேர்காணல் பொழுதுபோக்கு பேச்சாகிவிடும். நடப்பு அறிதல், நடைபெறப்போவதைப் பற்றி அறிதல், தலைவர்கள்,கலைஞர்கள், சிந்தனையாளர்கள் போன்றவர்களின் ஆளுமைத்திறன் (அ)

தனித்தன்மையை அறிதல்.

**<u>தமிழ் மாதங்கள் அதற்கான இணையான மலையாள மாதங்கள்</u>**

சித்திரை - மேடம்

வைகாசி - இடவம்

ஆனி - மிதுனம்

ஆடி - கர்க்கடகம்

ஆவணி - சிங்கம்

புரட்டாசி - கன்னி

ஐப்பசி - துலாம்

கார்த்திகை - விருச்சிகம்

மார்கழி - தனுசு

தை - மகரம்

மாசி - கும்பம்

பங்குனி - மீனம்

**<u>ஒரு மதிப்பெண் வினா-விடைகள்;</u>**

1. திருக்குறளின் வேறு பெயர்கள்?

முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவம், பொய்யாமொழி , வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை .

2. பசித்தவர்கள் பக்கம் என்னும் கவிதையை எழுதியவர்?

கவிஞர் சமயவேல்

3. சிலேடை பாடுவதில் வல்லவர்?

காளமேகப் புலவர்

4. மண்தேசம் என்னும் சிறுகதையின் ஆசிரியர்?

அ. முத்தானந்தம்

5. போராளிகள் என்று காளமேகப்புலவர் கூறும் சிலேடைப் பொருள்?

படைவீரர்கள், உழவர்கள்

6. கூளம் என்னும் சொல்லின் பொருள்?

வைக்கோல்

7. 'ஏர் எழுபது' என்னும் நூலின் ஆசிரியர்?

கம்பர்

8. நெல் சேமிக்கும் பெரிய மண்பானையின் பெயர்?

பத்தாயம், குதிர்(குலுக்கை)

9. நம்ம நிலம் என்னும் கவிதையின் ஆசிரியர்?

கவிஞர் மு. சுயம்புலிங்கம்

10. கவிஞர் மு. சுயம்புலிங்கம் எழுதிய நூல்கள்?

நிறம் அழித்த வண்ணத்துப் பூச்சிகள்,

தீட்டுக்கறை படிந்த பூ, அழிந்த சேலைகள்,

ஒரு பனங்காட்டுக்கிராமம்.

11. நெல் பயிரிடும் முறை பற்றி கூறும் சங்க நூல்?

பெரும்பாணாற்றுப்படை

12. பெரும்பாணாற்றுப்படையில் கலப்பை எவ்வாறு வருணிக்கப்படுகிறது?

கலப்பை – பெண் யானை, கொழு - உடும்பின் முகம்.

13. தமிழுக்கு கதி எனப் புகழப்பட்டவர் யார்?

கம்பர்

14. பத்தாயம் அல்லது குதிர் என்பதன் பொருள்?

நெல் சேமிக்கும் கலன்

## பசும் பூமி

**இயற்கை வேளாண்மை அழிந்து விடுவதால் ஏற்படும் விளைவுகள்**

- புதிய நோய்கள் உண்டாதல்
- நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து போதல்
- இயற்கை மாசுபாடு அடைதல்
- சுற்றுப்புறச்சீர்கேடு ஆதல்

**இயற்கை உரப்பயன்பாடு – நன்மைகள்**

- மண்வளம் பாதுகாக்கப்படல்
- நோய்த் தொற்றுகளிலிருந்து மனிதர்களைப் பாதுகாத்தல்.
- இயற்கை மாசுபடுதலைத் தவிர்த்தல்

**இயற்கை வேளாண்மையே சுற்றுச்சூழலுக்கு உகந்தது**

- தரமான விதைகளைப் பயன்படுத்தல்
- இயற்கை பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தல்
- இயற்கையோடு இயைந்த முறைகள்
- பாரம்பரியப் நெல்விதைகளைப் பயன்படுத்தல்
- பசுந்தாள் உரங்களைப் பயன்படுத்தல்
- மரபுவழி வேளாண்மை பாதுகாக்கப்படல்

- இயற்கை வளங்கள் உபயோகித்தால் சுற்றுச்சூழலையும் பூமியையும் பாதுகாக்கலாம் .
- **<u>அறிவியல் வளர்ச்சியும் இயற்கை (பூமி )ச் சிதைவும்:</u>**
    - ஆலைகள் வந்தன.
    - சாலையெங்கும் வாகனங்கள் நிறைந்தன .
    - குளிரூட்டிகள் பெருகின.
    - காடுகள் அழிக்கப்பட்டன.
    - இராசயன உரங்கள் புழக்கத்திற்கு வந்தன .
    - நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டது , காற்று மாசுபாடு அடைந்தது.
    - மண்வளம் மற்றும் நீர்வளம் போனது.
    - உருகும் பனிப்பாறைகளாய் கடல்நீர் சுடுகிறது.
    - மண்ணுயிர்களுக்கு அழிவுநிலை நெருங்கிக்கொண்டிருக்கிறது.

<u>சூட்டடித்தல் - விளக்கக்குறிப்பு எழுதுக?</u>

முற்றி விளைந்த நெல்லை அரிந்து திரட்டியபின்பு,அக்கதிர்களைக் களத்திற்குக் கொண்டு வருவர் . அக்கதிர்களைத் தரையில் அடித்து நெல்மணிகளாகக் குவிப்பர் . நெல் முழுவதும் உதிராத கதிர்களைப் போராகக் குவிப்பர் .அதிலுள்ள நெற்களை உதிர்ப்பதற்காக அவற்றை வட்டமாகப் பரப்பி, மாடுகளை சுற்றிவரச் செய்வர் . அதற்கு ‘சூட்டடித்தல் ‘ என்று கூறுவர்.

# பொங்கலோ பொங்கல் !

ஆசிரியர் பழனிபாரதி அவர்கள் இக்கவிதையில் விவசாயத்திற்கும் விவசாயிக்கும் ஏற்பட்ட இழிநிலையைப் படம் பிடித்துக்காட்டுகிறார்.

மாதம் மும்மாரி மழைபெய்து, பருவ காலம் பொய்க்காது இருந்த காலக்கட்டங்களில் விவசாயம் செழித்துக்காணப்பட்டது. விவசாயியும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். ஆனால் இன்று பருவ கால மாற்றத்தால் மழை பொய்த்துவிட்டது. மழையானது பெய்யக்கூடாத நேரத்தில் பெய்தும் பெய்யவேண்டிய நேரத்தில் பெய்யாமலும் விவசாயிகளை வறுமை நிலைக்குத் தள்ளிவிடுகின்றது.

காலம் பொய்க்காது மழைபெய்த காலத்தில் விளைச்சல் கிடைத்த சம்பா இன்று இல்லாமலேயே போய்விட்டது. சம்பா பயிரிடப்பெற்ற நிலம் இன்று வெடித்துக் காணப்படுவதுடன், நீர்த் தன்மையற்றுத் திகழும்போது, பனிநீர்ப் பட்டவுடன் சில்லிடுவதாகக் கூறுகிறார் ஆசிரியர்.

பொங்கல் பண்டிகையின் முதல் நாளில் கொண்டாடப்படுவது போகிப்பண்டிகை. விவசாயம் செய்து, அறுவடை செய்த பின்பு வீட்டில் இருக்கும் பழைய பொருட்களை எரிப்பது போகியாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆனால் இன்று பருவகால மாற்றத்தால் விவசாயம் நடைபெறாமல் விவசாயிகள் வறுமை நிலைக்குத் தள்ளப்படுவதும் கடன் அடைக்க முடியாமல் உயிரை மாய்த்துக்கொள்ளுவதும் பத்திரிகைச் செய்தியின் மூலமாக அறியமுடிகிறது. இந்த அவலநிலையையே ஆசிரியரும் தம் கவிதையின் வாயிலாக உணர்த்துகிறார்.

‘தை’ பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். தை மாதம் பிறக்கும்போது நெல், கரும்பு போன்ற விவசாயத்தால் இலாபம் கிடைக்கும். மழை செய்த பருவமாற்றச் சதியால் ‘தை’ மாத வரவு மகிழ்ச்சி தருவதாக இல்லை.

உழைத்துத் உழைத்துக் கடனாளியாகிப் போன விவசாயிகள் ஒரு வேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் கஷ்டப் படவேண்டிய அவல நிலையையும் ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். மழை இல்லாததால் விவசாயம் நடைபெறாமல் போனது. நன்செய் நிலங்கள் எல்லாம் புன்செய் நிலங்களாகிப் போயின. அறுவடை இல்லாததால் மாடுகளுக்கு உணவாகும் வைக்கோல் இல்லாமல் போனது. இதனால் நிலங்கள் எல்லாம் தொழிற்சாலைகளுக்கு செல்ல உதவும் விரைவுசாலைகளாக மாறின. மாடுகள் எல்லாம் அடிமாடுகளாக விற்கப்பட்டன.

பொங்கலுக்காகத் தயார்செய்யப்பட்ட மண்பானைகள் எல்லாம் வீணாகி, உடைந்து போய்விட்டன. மண்பாண்டத் தொழிலாளிகள் நிலையும் கவலையளிப்பதாக மாறிவிட்டன. விவசாயிகளின் நிலையை, கவலையை, வறுமையை, பசியை போக்குவதாக என் சொல்லரிசிகள் அமையட்டும் என கவிஞர் பழனிபாரதியின் விவசாயிகள் மீதான அக்கறையை உய்த்துணரலாம். விளைநிலங்கள் இயற்கை மாற்றங்களால் சீரழிந்து வருகின்றன. வேளாண்மையையும் விவசாயிகளையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இனிவரும் தலைமுறையினர் செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**<u>விவசாயத்தோடு தொடர்புடைய பழமொழிகள்:</u>**

- காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
- அகல உழுவதைவிட ஆழ உழுவதே நல்லது.
- ஆடிப் பட்டம் தேடி விதை.
- பார்க்காத பயிர் வீண்.
- ஆடு கிடந்த இடத்தில் நெல்லை விதை.

# அலகு -2 கலையும் பண்பாடும்

## நாட்டார் பண்பாடு

### மதுரை நகரின் அழகு - கான்சாகிபு கதைப்பாடல்

மதுரை நகரில் தேங்காய் தண்ணீரில் மோதுகின்றதாம் . தூய்மையான சிறு மல்லிகைப்பூ உதிர்ந்து விழுகின்றதாம் . இந்த மதுரைக் கோட்டையில் மாங்காய் காய்த்து குலை உதிர்கின்றதாம் . நல்ல மங்கையர்கள் பந்தாடுகிறார்கள் . அன்றைய காலகட்டத்தில் பெண்கள் விளையாடும் விளையாட்டுக்களில் மலர் பந்து ஆடுதலும் ஒன்றாகும் .

இந்திரனின் யானையான வெள்ளை யானை மதுரை வீதிகளில் விளையாடுகின்றதாம். வெண்கதலிக்குலை நெருக்கமாகக் காணப்பட்டது . அமிர்தம் எல்லாத்திசைகளிலும் சொரிகின்றது. நீண்ட வீதிகளில் பல வகையான மலர்களின் வாசம் வீசுகின்றது . மந்தாரை, முல்லை, இருவாட்சி, செண்பகப்பூக்களில் இருந்து விழுகின்ற தேனானது இந்தத் தூய்மையான நகர வீதிகளில் ஒழுகுகின்றதாம். மதுரைக்கோட்டையில் நவமணி குவித்து வைக்கப்பட்டுள்ளதாம் . வாழைமரங்கள் சாய்ந்து காணப்படுகின்றதாம் . குரங்குகள் பலாப்பழத்தை மத்தளம் கொட்டுகிறது. தாழைதனில் மயில் தோகை விரித்து ஆடுகின்றது . வண்டு பூக்களில் உள்ள தேனைக் குடித்து ரீங்காரம் இசைக்கின்றது . கொத்தளங்கள் அமைக்கப்பட்டுள்ளது .

**மதுரைநகரின் அழகு - வர்ணனைக் குறிப்பாக எழுதுக ?**

- கதைப் பாடல் மூலம் கலை மற்றும் பண்பாடுகளை அறிதல் கதையைப் பாடலாக பாடும் பழங்கால மக்கள் இயல்பு.
- மதுரையின் இயற்கை வளம்.
- மங்கையர்கள் கண்டு மகிழும் வண்ணம் மல்லிகை போன்ற மலர்கள் பூத்துக்குலுங்குதல்.
- நீண்ட தெருக்களின் அமைப்பு முறை.
- சித்திரைத் திருவிழா சிறப்பு .
- அழகர்கோவிலின் இயற்கையழகும் குரங்குகளின் சேட்டைகளும்.
- கோட்டையின் சிறப்பு.
- முக்கனிகளின் சிறப்பு( மா, பலா , வாழை ).
- கதைப்பாடல்கள் பண்பாட்டுச் செய்திகளைச் சொல்லும் கருவூலங்களாக அமைகின்றன .

**பேராசையின் பரிசு ( நாட்டார் கதைகள் )**

நாட்டுப்புற மக்களின் பண்பாட்டைப் பறை சாற்றுவதில் நாட்டுப்புறக் கதைகளுக்கும் முக்கியப் பங்குண்டு. மிக எளிய நடையில் படிக்காதவர்களும் புரிந்துகொள்ளும் நடையில் கூறப்படுவது இதன் சிறப்பாகும் .

'பேராசையின் பரிசு' என்ற கதையில் பாமர மக்களின் மனநிலை படம்பிடித்துக்காட்டப்படுகிறது.

- நாட்டார் மக்களின் கதைகூறும் வழக்கத்தை இக்கதைகள் மூலம் அறியலாம்.

- ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்ற புத்தரின் பொன்மொழியை நினைவூட்டுகிறது.
- பேராசை பெருநஷ்டம்
- மனம் போல வாழ்வு
- கேடு நினைப்பவன் கெடுவான்
- நன்மை நினைத்தால் நன்மை நடக்கும்
- பொறுத்தார் பூமி ஆள்வார்.
- நாட்டுப்புற மக்களின் மன்னிக்கும் குணம் பேசப்படல்
- பொறாமையால் ஏற்படும் விளைவுகளை உணர்த்துதல்
- பாமர மக்களின் இயல்பான நற்சிந்தனைகளை நவில்தல்
- ஏழையாக இருப்பவனை ஏளனம் செய்யக்கூடாது. அவனும் ஒருநாள் வசதியுடையவனாக மாறலாம்.
- சூழலால் பணக்காரன் ஏழையாவதுமுண்டு என்பதை உணர்த்தல் .
- பணத்தைவிட அன்பே பெரிது.
- நல்லது நினைத்தால் நல்லதே நடக்கும்.

என்பன போன்ற நற்கருத்துகள் மாணவர்களிடம் நற்குணங்களை போதிக்கக்கூடியதாகவும் பண்பாட்டுச் சிந்தனைகளை வளர்ப்பதாகவும் திகழ்கின்றன. பேராசையின் பரிசு என்ற கதை மூலம் பாமர மக்களின் இயல்பான சிந்தனைகள் வெளிப்படுவது உண்மையே .

# செவ்விலக்கியப் பண்பாடு

**சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு:**

- யாதும் ஊரே! யாவரும் கேளிர்! - ஒருலக மனப்பான்மை
  'ஒன்றே உலகம் ' என்ற உயரிய சிந்தனை.
- தமிழ்நாட்டுச் சமய வரலாறு - நம் மக்களின் ஒப்பற்ற பெருந்தன்மைக்குச் சான்றாதல்.
- எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் தமிழர் பண்பாட்டைப் படம்பிடித்துக் காட்டல்.
- நடுகற்கள் - வீரத்தைப் போற்றியதன் அடையாளம்.
- இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறை
- நீதியும் ஒழுக்கமும் அமைந்த அரசியல் அமைப்பு முறைகள்.
- பொருட் செல்வத்தைவிட அருட் செல்வம், செவிச் செல்வம், கல்விச் செல்வம், பெருந்தன்மைச் செல்வம், ஈகைச் செல்வம், போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளித்த சிறப்பு.
- சங்க கால மக்களின் பழக்க வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளை விளக்குதல்.

**சங்கத் தமிழர் போற்றிய செல்வங்கள்**

- அருள் செல்வம்
- செவிச்செல்வம்
- பெருந்தன்மைச்செல்வம்
- கல்விச்செல்வம்

- ஆண்மைச்செல்வம
- ஈகைச்செல்வம்

**தமிழறிஞர்கள் தமிழை எவ்வாறெல்லாம் பொற்றுகின்றனர் ?**

தனித்தமிழ் , செந்தமிழ் , முத்தமிழ் , தீந்தமிழ், தேன்தமிழ் , தண்டமிழ் , வண்டமிழ், கோதில் தமிழ் , தீதில் தமிழ் .

**சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள் :**

- இயற்கை ஈடுபாடு
- அழகோடு இரண்டறக் கலத்தல்
- தூயக் கொள்கைகள்
- வாழ்க்கையின் மேலான குறிக்கோள்

**பண்டையத்தமிழர் திருமணம் (அகநானூறு – 86)**

உழுந்தம் பருப்பைக் கூட்டிச் சமைத்த பொங்கலோடு , பெரிய சோற்றுத் திரளை உண்ணுதல் ஆரவாரத்துடன் நிகழ , வரிசையாகக் கால்( தூண்கள் ) களையுடைய பெரிய பந்தலில் , கொணர்ந்து இட்ட புதிய மணலைப் பரப்பி , மனையில் விளக்குகளை ஏற்றிவைத்து , மாலைகளைத் தொங்கவிட்டுத் தீயக் கோள்களின் தொடர்பு நீங்கிய, வளைந்த வெண்ணிலாவைக் குற்றமற்ற சிறந்த புகழையுடைய ரோகினி என்னும் நாள் அடைந்த வேளையில் , மிக்க இருள் நீங்கிய அழகான காலை நேரத்தில் , தலை உச்சியில் குடத்தை வைத்திருப்பவர்களும் , புதிய அகன்றப் பானைகளைத் தூக்கி வைத்திருப்பவர்களும் ஆகிய திருமணத்தினைச் செய்து வைக்கும் ஆரவாரமுடைய முதிய மங்கல மகளிர் முன்னே தருவனவாகவும் , பின்னே தருவனவாகவும் முறையே

*தந்திட, புதல்வர்களைப் பெற்ற, தேமலுடைய அழகிய வயிற்றை உடைய, தூய அணிகளை அணிந்த நான்கு பெண்கள் கூடி, கற்பினின்று வழுவாது நல்ல பேறுகளைத் தந்து உன்னை எய்தியக் கணவனை விரும்பிப் பேணும் பெண்ணாக நீ ஆக என்று தண்ணீருடன் கூடிய ஈரமான இதழ்களையுடைய பூக்களை நெல்லுடன் அவளுடைய அடர்ந்தக் கருமையான கூந்தலில் தூவி வாழ்த்தினர். இவ்வாறு திருமணம் முடிந்த பின்னர், அவளுடைய சுற்றத்தார் ஒலியுடன் விரைந்து வந்து, 'பெரிய மனைக்கிழத்தி ஆவாயாக நீ', என்று அவளை ஆசீர்வதித்தனர்.*

***<u>சரியானவற்றைப் பொருத்தி எழுதுங்கள்:</u>***

(1) *பொங்கலோ பொங்கல் - தனி நாயக அடிகள்*

(2) *மதுரை நகரின் அழகு - நாட்டார் கதைகள்*

(3) *பேராசையின் பரிசு - கான்சாகிபு கதைப்பாடல்*

(4) *சங்க இலக்கியத்தில்தமிழர்பண்பாடு - கவிஞர் பழனிபாரதி*

***விடை :***

*(1) பொங்கலோ பொங்கல் - கவிஞர் பழனிபாரதி*

*(2) மதுரை நகரின் அழகு -கான்சாகிபு கதைப்பாடல்*

*(3) பேராசையின் பரிச - நாட்டார் கதைகள்*

*(4) சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாடு -தனிநாயக அடிகள்*

***சரியாகப் பொருத்தி எழுதுங்கள் – என்று கேட்கப்பட வாய்ப்புள்ளவைகள்***

*(1) வணிகத்தின் மொழி - ஆங்கிலம்*

*(2) சட்டத்தின் மொழி - இலத்தீன்*

*(3) இசையின் மொழி - கிரேக்கம்*

*(4) தத்துவத்தின் மொழி - ஜெர்மன்*

*(4) தூதின் மொழி - பிரெஞ்சு*

*(5) காதலின் மொழி - இத்தாலி*

*(6) இரக்கத்தின் மொழி - தமிழ்*

***ஒரு மதிப்பெண் வினாக்கள்***

1. *வயல்வளம் மிக்க நாடு எது ?*

   *சோழ நாடு*

2. *‘ சோறுடைத்து ‘என்று சிறப்பிக்கப்படும் நாடு ?*

   *சோழ நாடு*

3. *இன்றைய திரைப்பட உலகிற்கு முன்னோடியாகக் கருதப்படுவது .*

   *கூத்துகள்*

4. *விழா என்னும் திறந்த வாசல் வழியாகத்தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும் என்று கூறியவர் .*

   *தாகூர்*

5. *வாய் மொழிப் பாடல்களில் முதலிடம் வகுப்பது ?*

   *தாலாட்டு*

6. *ஒரு திசைப்பெயரொடு இன்னொரு திசைப்பெயரொடு இன்னொரு திசைப்பெயரோ, வேறுபெயரோ இணைவது .*

   *திசைப்பெயர் புணர்ச்சி*

7. *வெண்டல் விக்கி என்ற அமெரிக்க அரசியல் அறிஞர் எழுதி வெளியிட்டநூல்*

ஒரே உலகம்

8. பிறந்த இடத்துப் பெருமையைச் சொல்லிப் பாடப்படும் நாட்டுப் புறப்பாடல் வகை.

தாலாட்டுப்பாடல்

9. பண்புப்பெயர் புணர்ச்சியில், நடுவில் நின்ற மெய்யெழுத்து இரட்டித்து வரும் எனில் சிறுமை + ஊர் என்பது எவ்வாறு மாற்றமடையும்?

சிற்றூர்

10. பொங்கலோ பொங்கல் என்னும் நூலின் ஆசிரியர்?

கவிஞர் பழநிபாரதி

11. பழநிபாரதி அவர்களின் பிற நூல்கள்?

புறாக்கள் மறைந்த இரவு, தண்ணீரில் விழுந்த வெயில், காதலின் பின் கதவு

12. நெல் அறுவடை பற்றிய செய்தி இடம்பெற்ற சங்க நூல்?

பொருநர் ஆற்றுப்படை

**13.** வேங்கை என்ற சொல்லிற்குரிய இரு பொருள்களை எழுதுக.

(1) மரம் (2) புலி

14. இரு தொம்பாக்களின் பெயர்களை எழுதுக?

(1) நீர்த்தொம்பா (2) பணத்தொம்பா

15. 'பாயா வேங்கை' என்பதைக் குறிக்கும் சொல் எது?

மரம்

16. 'சூடாத வாகை' என்பதைக் குறிக்கும் சொல் எது?

மரம்

17. 'பூவா வேங்கை' என்பதைக் குறிக்கும் சொல் எது?

புலி

18. 'வாடாதவாகை' என்பதைக் குறிக்கும் சொல் எது?

வெற்றி

## வேலன் வெறியாட்டு

1. மக்களுக்கு இரு நிலைகளில் நோய் ஏற்படுகிறது. அவை யாவை? விளக்குக

மக்களுக்கு இரு நிலைகளில்நோய் ஏற்படுகிறது. ஒன்று உடல் நோய். இரண்டு மன நோய். உடல் நோய் சுற்றுச் சூழலால் ஏற்படுவது. மனநோய் தெய்வம் அல்லது தீயச் சக்திகளின் தீண்டுதலால் ஏற்படுவது.

2. மனநோய் பாதிக்கப்பட்டவர்கள் நிலை எவ்வாறு இருக்கும்? பட்டியலிடுக.

- மனநோய் பாதிக்கப் பட்டவர்கள் உணவு, உடை, உறக்கம் பற்றிக் கவலைப்படுவதில்லை.
- நல்ல ஆடை, அணிகலன்கள் அணிவதில்லை.
- இரவெல்லாம் தூக்கமின்றி விழித்திருப்பர்.
- எதிலும் ஆர்வம் காட்டுவதில்லை.

3. ‘வேலன் வெறியாட்டு’ எதற்காக நடத்தப்படுகிறது?

தெய்வதோஷம் நீங்கி, மன நோயினின்றும் காப்பாற்றும் பொருட்டு அக்காலத்தில் நடத்தப்பட்ட ஒரு சடங்கு தான் வேலன் வெறியாட்டு. இந்நோய் முருகன் வருத்துவதால் உண்டாவதாக ஒரு நம்பிக்கை. எனவே வேலனுக்கு எடுக்கப்படும் இச்சடங்கு வேலன் வெறியாட்டு எனப்பட்டது.

4. வெறியாட்டு என்பதன் பொருள் யாது?

ஆடுவது

5. வேலன் வெறியாட்டு நடத்தும் இனத்தவர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

வேலன்

6. வேலன்வெறியாட்டு சடங்கு நடத்துவதின் முக்கிய நோக்கம் யாது?

வேலனை அழைத்து வெறியாடச்செய்து முருகப் பெருமானுக்குப் பலி தருவதே இச்சடங்கின் முக்கிய நோக்கமாகும்.

7. வேலன் வெறியாட்டு நடத்தும் விதத்தை குறிப்பாக எழுதுக?

- இரவு நேரம் வெறியாட்டு நடைபெறும்.
- நிலத்தைத் திருத்தி வெறியாட்டுக்களம் அமைத்தனர்.
- தூய்மையான வெண்மணலை விரிப்பர்.
- களம் முழுதும் உதிரிப்பூக்களைத் தூவுவர்.
- களத்தின் நடுவே முருகவேலின் ஆயுதமாகிய ஒளி பொருந்திய நீண்ட வேல் ஒன்று வைக்கப்படும்.
- வேலிற்கு மாலை அணிவிக்கப்படும்.
- ஆட்டுக் குட்டியைப் பலியாகக் கொடுப்பர்.
- முருகப்பெருமான் தன் மேல் ஏறியதாக வேலன் அசைந்து அசைந்து ஆடத் தொடங்குவான்.

- இரவு முழுவதும் வெறியாட்டம் நடை பெறுவதுண்டு.

**<u>நடுகல்</u>**

1) *‘வீரம் செறிந்த தமிழ்நாடு’ என்று பாடியவர் யார்?*

*பாரதியார்*

2) ***'நடுகல்' குறித்து விளக்கக்குறிப்பு எழுதுக?***

*அக்காலத்தில் தமிழர்கள் வீரமுள்ளவர்களாக இருந்தனர். வீரர்களைப்போற்றுவதும் புகழ்வதும் வாழ்த்துவதும் வணங்குவதும் பண்டைத்தமிழர் பண்பாடாகவே இருந்தது.*

*அக்காலத்தில் நாட்டுக்காகப் போராடுவது என்பது ஒரு நித்திய நிகழ்ச்சியாகவே நடந்துள்ளது. மேலும் அன்னிய நாட்டைச் சார்ந்தவர்கள் ஒரு நாட்டுக்குள் புகுந்து அன்றைய மக்களின் முக்கிய வாழ்வாதாரமாக விளங்கிய ஆடுமாடுகளைக் கவர்ந்து செல்வதும் வழக்கமாக இருந்துள்ளது. சில நேரங்களில் வனவிலங்குகள் கிராமங்களுக்குள் புகுந்து மக்களை அச்சப்படுத்துவதும் துன்புறுத்துவதும் உண்டு. இது போன்ற சூழ்நிலைகளில் வீரம் மிகுந்தவர்கள் நாட்டு மக்களையும் ஆடுமாடுகளையும் காப்பாற்றும் பொருட்டுப் பகை நாட்டுப்படைகளையும் திருடர்களையும் எதிர்த்துப் போராடுவர். இவ்வாறாகப் போர் முதலான ஏதேனும் வீரச் செயல்களில் ஈடுபட்டு வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக, ஒரு பெரிய கல்லை நாட்டி வழிபடுவது அன்றைய மரபு. வீரர்களின் நினைவாக நாட்டப்படும் இக்கல் ‘நடுகல்’ என அறியப்பட்டது.*

3) ***நடுகல்லின் அமைப்பையும் வழிபாட்டு முறையையும் தொகுத்தெழுதுக?***

- *நடுகற்களில் வீரனின் உருவம் பொறிக்கப் பட்டிருக்கும்.*

- இடக்கையில் வில்லும் வலக்கையில் வாளும் தாங்கிய நிலையில் செதுக்கப் பட்டிருக்கும்.
- உருவத்தின் ஒரு பக்கத்தில் வீரனின் பெயர், அவன் புரிந்த வீரச் செயல் ஆகியவை குறிக்கப்பட்டிருக்கும்.
- நடுகல்லின் மேல் புடவையால் செய்யப்பட்ட பந்தல் அமைப்பர்.
- தூய நீரினால் நடுகல்லை நீராட்டுவர்.
- சிவந்த பூக்களையும் தழையையும் விரவித் தொடுத்துக் கட்டிய மாலையையும், வேங்கை மரத்தின் பூக்களால் தொடுத்த மாலையையும் கல்லுக்கு அணிவிப்பர்.
- நடுகல்லைச் சுற்றி வேலி போல் கேடயங்களை நிறுத்தி வைப்பர்.
- கேடயங்களைத் தாங்குவதற்காக வேல்களை ஊன்றி வைப்பர்.
- கள்ளை நிறைத்து கல்லின் முன்னால் படைப்பர்.

இவ்வாறு நடுகல்லைத் தெய்வமாக நினைத்து வழிபடுவர்.

4) **சிலப்பதிகாரம் குறிப்பிடும் பதினொரு வகை கூத்துகளைப் பட்டியலிடுக?**

1. அல்லியம்
2. மல்
3. துடி
4. குடை
5. குடி
6. பேடு
7. மரக்கால்
8. பாவை
9. கடையல்
10. பாண்டரங்கம்

*11. கொடுகொட்டி*

5) ***கீழ்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுக?***

*நடுகல், வீரம், தமிழர், காலம் , கூத்து , மரம், சின்னம், அணி*

***விடை :*** *அணி, காலம், கூத்து, சின்னம், தமிழர், நடுகல், மரம், வீரம்.*

## குறிஞ்சிப்பாட்டு

*1. குறிஞ்சிப்பாட்டு எந்த இலக்கிய வகையைச் சேர்ந்தது?*

*பத்துப்பாட்டு*

***2. சரியானவற்றைப் பொருத்தி எழுதுங்கள்:***

*(அ) குறிஞ்சி - காடும் காடு சார்ந்த இடமும்*

*(ஆ) முல்லை - மலையும் மலை சார்ந்த இடமும்*

*(இ) மருதம் - கடலும் கடல் சார்ந்த இடமும்*

*(ஈ) நெய்தல் - வயலும் வயல் சார்ந்த இடமும்*

***விடை:***

*(அ) குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்*

*(ஆ) முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்*

*(இ) மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்*

*(ஈ) நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்*

*3. '**அறத்தொடு நிற்றல்**' – குறிப்பு எழுதுக?*

*காதலர் இருவர் தாமே தனியராக எதிர்ப்பட்டு உள்ளம் கலந்து களவு ஒழுக்கம் கொள்வர். இக்களவொழுக்கம் அறத்தொடு நிற்றல் வாயிலாகப் பிறருக்கும் வெளிப்படும். அறத்தொடுநிற்றல் என்பது தலைவி தன்னுடைய காதலை அறத்தின் வழிநின்று தோழிக்கு எடுத்துரைத்தலாகும். தோழி தன்னுடைய தாயாகிய செவிலிக்கு*

இதைத் தெரிவிப்பாள். செவிலி, தலைவியின் தாயாகிய நற்றாய்க்கு இந்தச் செய்தியைச் சொல்லுவாள். நற்றாய் இதனைத் தலைவியின் தந்தையாகிய தன் கணவனுக்கும் தலைவியின் சகோதரர்களுக்கும் தெரிவிப்பாள். இவ்வாறு தலைவியின் காதல்செய்தி முறைப்படி வெளிப்படுவதே அறத்தொடு நிற்றல் எனப்படும்.

4. குறிஞ்சிப்பாட்டு நூலின் ஆசிரியர் யார்?

கபிலர்

5. குறிஞ்சிப்பாட்டு யாருக்காகப் பாடப்பட்டது?

ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்ததற்குப் பாடியது.

6. 99 வகை மலர்கள் பற்றி கூறும் நூல் எது?

குறிஞ்சிப்பாட்டு

7. கீழ்வரும் தொடர்களுள் சரியான தொடர்களை எடுத்தெழுதுக?

(அ) குறிஞ்சிப் பாட்டு நூலின் ஆசிரியர் கபிலர்

(ஆ) குறிஞ்சிப்பாட்டு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று

(இ) குறிஞ்சிப்பாட்டு அறத்தொடுநிற்றல் பற்றி கூறுகிறது

(ஈ) குறிஞ்சிப்பாட்டு 99 வகை மலர்கள் பற்றிக் கூறுகிறது

**<u>விடை :</u>** (அ) குறிஞ்சிப்பாட்டு நூலின் ஆசிரியர் கபிலர்

(இ) குறிஞ்சிப்பாட்டு அறத்தொடுநிற்றல் பற்றிக் கூறுகிறது.

# <u>கூத்துக்கலை</u>

## <u>குறிஞ்சிக் கூத்து</u>

1.***'கூத்து'*** *குறித்து குறிப்பு எழுதுக?*

*'கூத்து' தமிழர்களின் பாரம்பரிய நாட்டார் கலை வடிவமாகும். கிராமத்தின் மண்வாசனையையும் , கிராம மக்களது வாழ்வாதாரங்களையும், அவர்கள் அதன்மீது கொண்ட பற்றுதலையும் வெளிப்படுத்தும் வகையில் அமைவது கூத்துக்கலை . கூத்துகள் பல்வேறு செய்திகளைச் சமூகத்திற்குச் சொல்கின்றன. முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் பொழுது போக்கிற்காகவும் தங்களது களைப்பைப் போக்கும் செயல்பாடுகளாகவும் ஒன்று கூடி ஆடிப் பாடி மகிழ்ந்தனர். அது நாளடைவில் பல்வேறு பரிமாணங்களையும் பெற்று கலைகளாகத் தோற்றம் பெற்று வளர்ந்து நிற்கின்றன. தெருக்கூத்தின் வளர்ச்சிதான் நாடகம் எனின் மிகையாகாது. கூத்து ஆடுவோர் கூத்தர் எனப்பட்டனர்.*

***2.கூத்துக்கலைஞர் ஒருவரை பேட்டிக் காண ஆறு வினாக்கள் கொண்ட வினாநிரல் தயார்செய்க?***

- *கூத்துக்கலையில் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?*
- *கூத்து நடத்தும் முறையை விவரியுங்கள்?*
- *கதைக் களத்தை எவ்வாறு தேர்வு செய்கிறீர்கள் ?*
- *கூத்தில் பயன்படுத்தும் ஆடை, ஆபரணங்கள் பற்றி கூறுங்கள்?*
- *கூத்துக்கலையில் ஏற்படும் பிரச்சினைகள் எவையெவை?*
- *கூத்துக்கலைகள் தற்போது நலிவடையக் காரணம் யாது?*

# மரபுத்தொடர்

1. **'மரபுத்தொடர்' விளக்கம் தருக?**

ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து வருவது தொடர் எனப்படும். மரபு என்பது காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருவது இவ்வாறு தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் சொற்றொடர்களே மரபுத்தொடர் எனப்படும்.

2. **'கிணற்றுத் தவளை' என்ற மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது?**

உலக அனுபவம் இல்லாமல் குறிப்பிட்ட வட்டத்திற்குள் வாழும் மனிதர்களைக் கிணற்றுத் தவளை என்பார்கள்.

3. **மரபுத் தொடர்களைப் பட்டியலிடுக?**

(அ) பிள்ளையார் சுழி

(ஆ) ஊசி குத்த இடம் இல்லை

(இ) ஓட்டைக்கை

( ஈ ) ருசிக் கண்ட பூனை

(உ) வெளுத்து வாங்கு

## விருந்தோம்பல்

**. சிலப்பதிகாரம் காட்டும் விருந்தோம்பல் பண்பினைக் குறித்து குறிப்பு எழுதுக ?**

**கண்ணகியின் விருந்தோம்பல் பண்பு**

கண்ணகியை மணந்த கோவலன் சிலகாலம் அவளிடம் குடும்பம் நடத்திவிட்டு , அவளை விட்டுப் பிரிந்து மாதவியிடம் செல்கிறான். மணிமேகலை என்ற குழந்தையும் பிறந்தது . பின்னர் மாதவியிடம்

ஏற்பட்ட மனக்கசப்பால் அவளை விட்டுப்பிரிந்து, கண்ணகியிடம் வருகிறான். கோவலன் மாதவியிடம் வாழ்ந்து தன் செல்வத்தை எல்லாம் இழந்ததற்கு வருந்துகின்றான். கண்ணகியின் காற்சிலம்பை வைத்து இழந்த செல்வத்தை மீட்க எண்ணி அவளையும் அழைத்துக் கொண்டு, மதுரைக்கு வந்து, மாதரி என்னும் ஆயர்குலப் பெண்ணின் வீட்டில் தங்குகிறான். கண்ணகி உணவு சமைத்துக் கொடுக்கிறாள். அப்போது கோவலன் கண்ணகியைப் பார்த்து மனவருத்தத்துடன், உனக்குப் பல சிறுமைகள் செய்தேன். ஆனாலும் திரும்பி வந்து அழைத்தவுடன் என்னுடன் வந்துவிட்டாயே என்று கேட்கிறான். அதற்கு கண்ணகி, சான்றோர்களுக்குத் தானம் செய்வதற்கும், அந்தணர்களைக் காப்பதற்கும் முற்றும் துறந்த முனிவர்களை வரவேற்பதற்கும், விருந்தினர்களை உபசரிப்பதற்கும், முடியாமல் போயிற்றே என்பதற்காக மட்டுமே தான் வருத்தப்பட்டதாகக் கூறுகிறாள். கணவனுடன் சேர்ந்து குடும்பம் நடத்தும் பெண்களே இவ்வாறெல்லாம் செய்வர்.
பண்டைத்தமிழர் விருந்தோம்பலுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை இதன் மூலம் அறியமுடிகிறது .

## நங்கையர் கூத்து

**1. நங்கையர் கூத்து - பெயர்க்காரணம் எழுதுக?**

நங்கை என்பது பெண்ணைக் குறிக்கும் சொல். நங்கையர்கள் ஆடும் ஆட்டமே. பெண்களின் நடனம் என்னும் பொருளில் நங்கையர் கூத்து என்று அழைக்கப்படுகிறது.

**2. சிலப்பதிகாரத்திற்கும் நங்கையர் கூத்திற்கும் உள்ள தொடர்பினை எழுதுக?**

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக்காதையில் கூத்தின் பல இலக்கணங்களும் கூறப்பட்டு உள்ளது. சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள முக்கிய கதாபாத்திரங்களுள் ஒன்று மாதவி. கோவலன் சிலகாலம் மாதவியுடன் குடும்ப வாழ்க்கை நடத்துகிறான். இவர்களுக்குப் பிறந்த மகள் மணிமேகலை. மாதவி தனது ஐந்து வயது முதல் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் பதினொரு வகை கூத்தினைக் கற்றாள் என்றும், தனது பன்னிரண்டாவது வயதில் அரங்கேற்றம் செய்தாள் என்றும் கூறப்படுகிறது. இந்தப் பதினொரு வகை கூத்துகளையும் ஒன்றோடு ஒன்று கலவாது ஆடும் ஆற்றல் பெற்றவள் இந்த மாதவி என்பதையும் சிலப்பதிகாரம் மூலம் அறியமுடிகிறது. இதை மட்டுமல்லாமல் அகக்கூத்து, புறக்கூத்து வகைகளையும் அறிந்தவள் மாதவி என்று இளங்கோவடிகள் கூறுகிறார். மேலும் இசைக்கருவிகள் பற்றிய குறிப்பும், அரங்க அமைப்பு பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

நங்கையர் கூத்தில் இசைக்கப்படும் மிழாவு என்னும் தோல் வாத்தியமே அன்றைய முழவு என்றும் கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக் காதையில் கூத்தின் பல இலக்கணங்களும் கூறப்பட்டு இருப்பதில் இருந்தும், இந்திரவிழா ஊரெடுத்த காதையில் கூத்துக் கலைஞர்கள் பற்றியும், அவர்கள் உபயோகித்த இசைக் கருவிகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதில் இருந்தும் இந்த நங்கையர் கூத்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் தெளிவாகிறது.

***3. நங்கையர் கூத்து நிகழ்த்தும் முறை குறித்து குறிப்பு எழுதுக ?***

ஒன்று அல்லது இரண்டு பெண்கள் சமஸ்கிருத ஸ்லோகங்களை நிதானமாக இராகத்துடன் பாடி தாளம் கொட்ட அபிநயம் காட்ட வேண்டிய

இடங்களில் காலால் அடவுகள் போட்டு கதையைத் தெரிவிப்பர். இதற்குத் துணையாக மிழாவுகள், இடைக்கா, திமிலை என்னும் தோல் வாத்தியக் கருவிகள் இசைக்கப்படும். பல சமயங்களில் ஸ்லோகத்தைத் தொடர்ந்து நீண்ட நேரம் தாளங்களில் வேறுபட்ட ஒலிக்க மட்டும் இடைவிடாமல் கேட்டுக் கொண்டு இருக்கும். இதற்கு ஏற்ப நடனமாடும் நங்கை நின்றோ, ஸ்டூலின் மேல் அமர்ந்து கொண்டோ அபிநயம், முத்திரைகளைக் காட்டி, முகத்தில் உணர்ச்சிகளைத் தத்ரூபமாக வரவழைத்துப் பார்வையாளர்களை அப்படியே கதை நடக்கும் காலக்கட்டத்திற்கு அழைத்துச் செல்வார்.

***4. நங்கையர் கூத்து நிகழ்த்தும் கால அளவு குறித்து எழுதுக?***

ஒரு கதையை முழுவதுமாக நிகழ்த்த தினசரி நான்கு அல்லது ஐந்து மணி நேரமாக நாற்பது நாற்பத்தைந்து நாட்கள் ஆகும். எடுத்துக்கொண்ட கதையம்சத்தைப் பொறுத்து நாட்கள் வித்தியாசப்படும். இதனால் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட கதையில் ஏதோ ஒரு பாகத்தை மட்டும் எடுத்துக்கொண்டு சில நாட்கள் நிகழ்த்துவர்.

***5. நங்கையர் கூத்தில் பயன்படுத்தப்படும் ஆடை, அலங்காரங்கள் குறித்து எழுதுக?***

நங்கையர் கூத்தைப் பொறுத்த அளவில் ஏற்றுக் கொண்ட கதாபாத்திரங்களுக்குத் தகுந்த உடை அலங்காரமோ முக அலங்காரமோ மாறுபடுவது இல்லை. ஏனென்றால் ஒருவரே எல்லாருடைய பாத்திரங்களையும் ஏற்று அபிநயித்து நடித்துக் காண்பிப்பதால் ஏறக்குறைய ஒரே விதமான அலங்காரமே எல்லாக் கதைகளிலும் காணப்படும்.

சிவப்பு நிறத்தில் ரவிக்கை கழுத்தைச் சுற்றி அடர்த்தியாக மணிமாலைகள், கைகளின் மேல்பாகத்தில் வங்கி போன்ற ஆபரணம், காதுகளில் மிகப் பெரிய பொன்னிறத் தோடுகள் இரண்டு, பின்னல் ஜடை, அதன் மேல் காகிதப்பூவோ அல்லது வண்ண நூலால் ஆன பூக்களோ சுற்றப்பட்டிருக்கும்.

தலையில் சடாரி போன்ற அமைப்பில் உள்ள சிவப்புத் துணியால் ஆன கிரீடம், அதன் நடுவில் ஒரு நாகம், வெள்ளை நிறத்தில் சாதாரண துணியில் கீழாடை, மேலே ஒரு துண்டு இவைதான் எல்லா கதாப்பாத்திரங்களுக்கும் எல்லாக் கதைகளுக்கும் உள்ள அலங்காரம். இதைத் தவிர இளஞ்சிவப்பு நிறம் காணப்படும்.

**6. நங்கையர் கூத்து நடத்தப்படும் மேடையில் காணப்படும் பொருட்கள் யாவை ?**

நங்கையர் கூத்து மேடையில் ஒரு பெரிய குத்துவிளக்கு ஏற்றப்பட்டு, அதன் அருகில் ஒரு வாழை இலையில் அரிசி, பூ, பழங்கள், தேங்காய் நிவேதனமாக வைக்கப்பட்டிருக்கும். பக்கத்தில் ஒரு பெரிய மரக்கால்படி போன்று பித்தளையால் ஆன பாத்திரத்தில் வழிய வழிய நெல் கொட்டப்பட்டு அதன் நடுவே கமுகு பூக்கள் செருகப்பட்டிருக்கும்.

**ஒரு மதிப்பெண் வினாக்கள் :**

1. கேரள கோவில் கலையான கூடியாட்டத்தோடு நெருங்கிய தொடர்புடைய கலைவடிவம் எது ?

   நங்கையர் கூத்து

2. நம்பியார் இனத்தைச் சேர்ந்த பெண்கள் ஆடும் கூத்து எது ?

   நங்கையர் கூத்து

3. நங்கையர் கூத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் எவை ?

மிழாவு , திமிலை , இடைக்கா

4. நங்கையர் கூத்து ஆடுவதில் முக்கியமானவர்கள் யார் யார் ?

மார்கி சதி , மார்கி உஷா

5. மார்கி சதி எழுதிய நூல் எது ?

ஸ்ரீராமசரிதம் நங்கையாரம்மா கூத்து

## மாமாங்கம்

### மாமாங்கம் குறித்து பத்திரிகைக்கு அனுப்பப் பெட்டிச்செய்தி தயார் செய்க?

| | | |
|---|---|---|
| 08.02.2021<br>திங்கள் | தினச்செய்தி | பக்கம் : 15<br>விலை : 5.00 |

**கேரளத்தில் கொண்டாடப்படும் மாமாங்கம்**

கேரளா ; பிப். 8

கேரளத்தின் பழங்கால விழாக்களில் மிகவும் முக்கியமான ஒரு விழாதான் மாமாங்கம் . 'கேரள மகா கூட்டம்' என்பதன் சுருக்கம்தான் மாமாங்கம் எனக் கூறுவதுண்டு. இவ்விழா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடப்பதாகும். திருநாவாய் ஆற்றின் கரையோர மணல்திட்டில் இவ்விழா நடைபெறும். மகரமாதம் பூசம் நாளில் ஆரம்பித்து கும்ப மாதம் மகம் நாளில் நிறைவுபெறும். முப்பது நாட்கள் தொடர்ந்து நடைபெறும். அரச குடும்பத்தினர் மற்றும் பிரபுக்களின் ஊர்வலம் கண்கவர் காட்சியாக அமையும்

**மாமாங்கம், மகாமகம் இவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.**

***<u>மாமாங்கம்:</u>***

*(அ) கேரளத்தின் பழங்கால விழாக்களில் ஒன்று.*

*(ஆ) 12 -ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்.*

*(இ) இடம்: திருநாவாய் ஆற்றின்கரை.*

*(ஈ) காலம்: 30 நாட்கள்.*

***<u>மகாமகம்:</u>***

*(அ) தமிழகத்தின் விழா*

*(ஆ) 12-ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும்*

*(இ) இடம்: கும்பகோணம்*

*(ஈ) மாசிமாதம் நடைபெறும்*

# ***<u>ஓண நன்னாள்</u>***

***ஓணவிழாவின் சிறப்பினை எடுத்துக்கூறி, ஓணவிழா கொண்டாட உங்கள் வீட்டிற்கு வருகை தருமாறு அழைத்து உனது நண்பனுக்கு / தோழிக்கு கடிதம் எழுதுக?***

*அன்புள்ள நண்பனுக்கு /தோழிக்கு ,*

*நான் இங்கு நலம் . நீ நலமாக இருக்கிறாயா? உன் படிப்பெல்லாம் எப்படி போகிறது. நன்றாகப் படிக்கவும். வீட்டில்*

*எல்லோரும் எப்படி இருக்கிறார்கள் . எல்லோரையும் விசாரித்ததாகச் சொல்லவும். கேரளாவில் ஓணவிழா சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள் . கேரள மக்கள் கொண்டாடும் விழாக்களில் மிக முக்கியமானது திருவோணத் திருவிழா. இது ஒரு தேசிய விழாவுமாகும். கேரளத்தில் இவ்விழாவைக் கொண்டாடதவர்கள் இருக்கமாட்டார்கள். காணம் விற்றும் ஓணம் உண்க என்னும் கூற்று ஓணத்தின் பெருமையைக் கூறும்.*

*எல்லோரும் எப்படி இருக்கிறார்கள் . எல்லோரையும் விசாரித்ததாகச் சொல்லவும். கேரளாவில் ஓணவிழா சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள் . கேரள மக்கள் கொண்டாடும் விழாக்களில் மிக முக்கியமானது திருவோணத் திருவிழா. இது ஒரு தேசிய விழாவுமாகும். கேரளத்தில் இவ்விழாவைக் கொண்டாடதவர்கள் இருக்கமாட்டார்கள். காணம் விற்றும் ஓணம் உண்க என்னும் கூற்று ஓணத்தின் பெருமையைக் கூறும்.*

*திருமாலின் அவதாரமாகிய வாமனையும் கேரள மன்னன் மகாபலியையும் தொடர்புபடுத்தும் ஒரு புராணக்கதை ஓணவிழாவின் தோற்றத்திற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது. ஓணவிழா பற்றிய ஒரு செய்தி சங்க இலக்கியப் பாடல்களில் இடம் பெறுகின்றது. தமிழகத்திலும் இவ்விழா கொண்டாடப் படுகிறது என்பதை இதன் மூலம் அறியமுடிகிறது. திருவோணத்தன்று மகாபலி தன் மக்களைக் காண வருவதாக ஐதீகம். பத்து நாட்கள் இவ்விழா கொண்டாடப் படுகிறது எங்கள் வீட்டிலும் திருவோணம் சிறப்பாகக் கொண்டாடுவோம். நீயும் உனது குடும்பத்தாரும் எங்கள் வீட்டிற்கு வந்தால் நாம் அனைவரும் ஒன்றாக ஓணவிழாவினைக் கொண்டாடி மகிழலாம். எனவே கண்டிப்பாக வரவேண்டும்.*

*பெறுபவர் முகவரி :* *இப்படிக்கு,*

*பெயர் :* *கையொப்பம்*

*இடம் :*

*அஞ்சல்*

GENERAL EDUCATION DEPARTMENT
SAMAGRA SHIKSHA, KERALA